**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109749

1. District : திருநெல்வேலி மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம்
Year: 2022 ஆண்டு
FIR No.: 08/2022 மு.த.அ. எண்
Date: 15.10.2022 நாள்

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 14.10.2022
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 10.00 hrs to
Time to : நேரம் வரை 15.45 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2022
Time : நேரம் 11.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
District Industries Centre, Tirunelveli, 2 Km North East.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V.V.கணேசன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.வ.கி.வெங்கடாசலபதி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24.09.1966
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், திருநெல்வேலி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.K.சிவசங்கரன், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 15.10.2022-ம் தேதி சுமார் 11.00 மணிக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.V.V.கணேசன் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், அவரது செயல்முறை நடவடிக்கை நாள்.14.10.2022-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் V.V.கணேசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், திருநெல்வேலி. பெறுனர் கூடுதல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்ட தொழில் மையத்தில் உள்ள பொது மேலாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. திருநெல்வேலி மாவட்ட தொழில் மையத்தில் பணிபுரிந்து வரும் பொது மேலாளர் NEEDS, UYEGP மற்றும் PMEGP திட்டங்கள் அடிப்படையில் தொழில் முனைவோர்க்கு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Ir. Robin Gnana Singh Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15/10/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

15/10/22
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 15/10/22 12.30h.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் E. MECLARINE ESKHO
Rank: நிலை ADSP, No. எண் VBAC Tirunelveli

கடன் (Loan) வழங்க பரிந்துரை செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக 14.10.2022-ம் தேதி மதியம் சுமார் 14.00 மணியளவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் அவர்களுடன் அவர்களது வேண்டுகோளின்படி நானும் இணைந்து காவல் ஆய்வாளர் திருமதி C.S.சாந்தி மற்றும் போலீசாரின் உதவியுடன் மேற்படி திருநெல்வேலி மாவட்ட தொழில் மையம் வளாகத்தின் மேல்புறம் உள்ள பொது மேலாளர் அலுவலகத்தை 14.10.2022-ம் தேதி மாலை 15.45 மணி முதல் 21.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த பொது மேலாளர் திரு.K.சிவசங்கரன் என்பவரிடமிருந்து ரூ.3,55,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்தை பற்றி திரு.K.சிவசங்கரனிடம் கேட்ட போது, சீதபற்பநல்லூர், ஆதவன் மாடர்ன் ரைஸ்மில் உரிமையாளர் திரு.V.இராமலிங்கம் என்பவரிடம் அரவை இயந்திரத்திற்கான அரசு மானிய கடன் தொகை ரூ.30,00,000/- பரிந்துரை செய்ததன் பேரில், அந்த கடன் தொகை அவருக்கு அனுமதிக்கப்பட்டு, அந்த மானிய கடன் தொகை ரூ.30,00,000/- அவரது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிட்டதால், மேற்படி விண்ணப்பதாரர் திரு.V.இராமலிங்கம் என்பவர் மேற்படி தொகை ரூ.30,00,000/- ற்கு 10% கமிஷனாக ரூ.3,00,000/-ஐ (மூன்று லட்சம்)னை தனக்கு இன்று (14.10.22) கொடுத்ததாக தெரிவித்தார். மேலும் திரு.K.சிவசங்கரன் என்பவர் வைத்திருந்த மீதமுள்ள பணம் ரூ.55,000/-த்திற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், மேற்படி பணம் தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நான் என்னுடைய இதுசம்பந்தமான செயல்முறை நடவடிக்கை நேற்று (14.10.2022) மாலை 15.45 மணிக்கு ஆரம்பித்து இரவு 21.00 வரை தயாரித்து மேற்படி பணம் ரூ.3,55,000/- கைப்பற்றப்பட்டது. எனவே திரு.K.சிவசங்கரன் அரவை இயந்திரத்திற்கான அரசு மானிய கடன் பரிந்துரை செய்த வகைக்கு திரு.V.இராமலிங்கம் அவர்களிடம் லஞ்சமாக ரூ.3,00,000/- கேட்டு பெற்ற திருநெல்வேலி மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் பொது மேலாளராக பணிபுரிந்த திரு.K.சிவசங்கரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி என்னுடைய புகார் மனுவுடன் கைப்பற்றப்பட்ட பணம், செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்.V.V.கணேசன், 15.10.2022) திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் 14.10.2022-ம் தேதி திருநெல்வேலி மாநகரம், மகராஜாநகர் அஞ்சல் செயின்ட் தாமஸ் ரோட்டில் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்ட தொழில் மையம் வளாகத்தின் மேல்புறம் உள்ள

பொது மேலாளர் அலுவலகத்தை திரு.V.V.கணேசன் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : 1) திரு.V.V.கணேசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. 2).திரு.E.மெக்லரின் எஸ்கால், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. 3).திருமதி.C.S.சாந்தி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. இன்று 14.10.2022-ம் தேதி மதியம் சுமார் 14.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட தொழில் மையத்தில் பணிபுரியும் பொது மேலாளர் NEEDS, UYEGP மற்றும் PMEGP திட்டங்கள் அடிப்படையில் தொழில் தொடங்குவதற்கு கடன் (Loan) பரிந்துரை செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.V.V.கணேசன் அவர்கள் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் ஆய்வாளர் திருமதி.C.S.சாந்தி மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 15.15 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0990-ல் புறப்பட்டு பாளையங்கோட்டை, அண்ணா விளையாட்டு அரங்கம் வழியாக திருநெல்வேலி மாவட்ட தொழில் மைய வளாகத்தில் மேல்புறம் தெற்கு பார்த்து அமைந்துள்ள பொது மேலளார் அலுவலகத்திற்கு மாலை சுமர் 15.45 மணிக்கு வந்து மேற்படி அலுவலகத்தின் வராண்டாவில் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விசாலம் கேட்டு தெரிந்து கொண்ட திரு.நவீன்குமார், த/பெ.ஜெயசந்திரன், கதவு எண்.18/43A, கல்லூரி ஹாஸ்டல் ரோடு, நாமக்கல் என்பவரை விசாரணை செய்ய அவர் திருநெல்வேலி மாவட்ட தொழில் மையத்தில் பொது மேலாளராக பணிபுரியும் திரு.சிவசங்கரன் என்பவரை TN 88 D 4639 என்ற டிகேந்திரா KUV காரில் நாமக்கல்லுக்கு கூட்டிச் செல்ல வந்துள்ளதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது பர்ஸ்சில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரு.2,500/- (500X5=2500) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திரு.நவீன்குமாரிடம் கேட்டபோது மேற்படி பணத்தை தனது செலவுக்காக வைத்துள்ள சொந்த பணம் என்று தெரிவித்தார். எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் மெயின் ஹாலின் தெற்கு வாசலை ஒட்டி இடதுபுறம் இருந்த Reception இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் கேட்டுத் தெரிந்த திரு.அருணன், புள்ளி விபர ஆய்வாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி என்பவரை சோதனை செய்ய அவரது பர்ஸ்சில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.1,390/- (500X2=1000, 200X1=200, 100X1=100, 50X1=50, 20X1=20, 10X2=20) இருந்தது. மேற்படி பணத்தை

பற்றி திரு.அருணனிடம் கேட்டபோது மேற்படி பணத்தை மருத்துவ செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி Reception இருக்கைக்கு வடக்கே இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் கேட்டுத் தெரிந்த திரு.தௌலத், அலுவலக உதவியாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி என்பவரை சோதனை செய்ய அவரது பர்ஸ்சில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.310/- (100X3=300, 10X1=10) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திரு.தௌலத்திடம் கேட்டபோது அது அவரது சொந்த பணம் எனவும் செலவிற்கு வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மெயின் ஹாலின் வடமேற்கு மூலையில் தெற்கு பார்த்து அமைந்துள்ள சுமார் 15x13 சதுர அடி அளவுள்ள பொது மேலாளர் அறையில் கிழக்கு பார்த்து பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பொது மேலாளர் திரு.K.சிவசங்கரன் என்பவர் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே மேற்கு பார்த்து பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட மேற்படி திரு.K.சிவசங்கரன் என்பவரது மனைவி திருமதி.நற்சோனை மற்றும் திரு.K.சிவசங்கரனின் மனைவியின் தங்கை திருமதி.மலர்விழி என்பவர்களும் இருந்தார்கள். மேற்படி திரு.K.சிவசங்கரன் என்பவரை சோதனை செய்ய அவர் அவரது சட்டையின் இடது பக்க உள்பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.5,500/- (500X10=5000, 100X5=500) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி சரியான முகாந்திரம் சொல்லாததால் விசாரணைக்காக மேற்படி பணம் ரூ.5,500/- கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.K.சிவசங்கரன் என்பவரது மர மேஜை மற்றும் அதில் உள்ள அறைகளை சோதனை செய்ய மேஜையின் மேல் இருந்த File No.1617/அ1/2022 என்று எழுதப்பட்டிருந்த File காணப்பட்டது. மேற்படி மர மேஜையின் வலதுபுற மேல் டிராயரை சோதனை செய்ய அதில் இருந்த Pending List of UYEGP, PMEGP and NEEDS கோப்பு மற்றும் AYINI Enterprises முகவரியுடன் செல்போன் எண் மற்றும் சில பண விபரங்கள் எழுதப்பட்ட இரண்டு துண்டு வெள்ளை தாள்கள் காணப்பட்டது. மேற்படி ஆவணங்கள் இரண்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.K.சிவசங்கரன் என்பவரது இருக்கைக்கு வலதுபுறம் இருந்த மர ஸ்டூடில் STICON என்று எழுதப்பட்ட கருப்பு நிற பையை பற்றி கேட்க அது அவர் தனது பை என்றும் கூறவே அதனை சோதனை செய்ய அதன் சைடு அறையில் திரு.K.சிவசங்கரன் என்பவரது அலுவலக விசிட்டிங் கார்டு மற்றும் ஆதார் கார்டு எண்.613462864941-ன் நகல் ஆகியவை காணப்பட்டது. மேலும் மெயின் அறையில் வைக்கப்பட்டிருந்த அவரது துணிகளுக்கு இடையே 500/- ரூபாய் நோட்டுகள் இரண்டு கட்டுகளாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது ரூ.1,00,000/- (500X200=1,00,000) இருந்தது. மேற்படி

பணத்தை பற்றி திரு.K.சிவசங்கரனிடம் கேட்டபோது திருநெல்வேலி மாவட்டம், சீதபற்பநல்லூரில் உள்ள ஆதவன் மாடர்ன் ரைஸ் மில் உரிமையாளர் கொடுத்த ரூ.3,00,000/-ல் ரூ.1,00,000/-ஐ மேற்படி STICON கருப்பு நிற பையில் வைத்திருந்ததாகவும், மீதமுள்ள ரூ.2,00,000/-ஐ மேற்படி பொது மேலாளர் அறையின் கிழக்கு பக்கத்தில் மேற்கு பார்த்து அமைந்திருந்த இரண்டு மர கப்போர்டுகளில் வடக்கு பக்கம் உள்ள கப்போர்டின் மேல் அறையில் வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி விசிட்டிங் கார்டு மற்றும் ஆதார் கார்டு மற்றும் பணம் ரூ.1,00,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.K.சிவசங்கரன் என்பவரது இருக்கையின் எதிரே கிழக்கு பக்கத்தில் மேற்கு பார்த்து உள்ள இரண்டு மர கப்போர்டுகளும் பூட்டப்பட்டிருந்தது. அதில் வடக்கு பக்கம் உள்ள மர கப்போர்டின் சாவியை திரு.K.சிவசங்கரன் என்பவரது மர மேஜையின் இடது பக்க அறையில் இருந்து எடுத்து கொடுத்த சாவியை வைத்து திறந்து பார்த்து சோதனை செய்ய மேற்படி மர கப்போர்டின் மேல் அறையில் நான்கு கட்டுகளாக 500/- ரூபாய் நோட்டுகள் இருந்தது மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது ரூ.2,00,000/- (500X400=2,00,000) இருந்தது. மேற்படி பணம் ரூ.2,00,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி தென்புறமுள்ள மர கப்போர்டை சோதனை செய்ய அதில் சில புத்தகங்கள் மட்டும் காணப்பட்டது. மேற்படி பொது மேலாளர் அறைக்கு கிழக்கு பக்கம் சுமார் 5x5 சதுர அடி அளவுள்ள கழிவறையுடன் கூடிய பொது மேலாளரின் தனி அறையை சோதனை செய்ய அதில் கிழக்கு பக்கம் சுவரில் உள்ள இரண்டு கடப்பாகல் போட்ட செல்ஃப் காணப்பட்டது. அதில் கீழேயுள்ள கடப்பாகல்லில் பொது மேலாளரின் மருந்து மாத்திரைகள், எண்ணெய் மற்றும் சோப்புகள் காணப்பட்டது. அதன் அருகில் வெள்ளை பேப்பரில் சுற்றி வைக்கப்பட்டிருந்த 500/- ரூபாய் நோட்டுகள் கட்டாக இருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.49,500/- (500X99=49,500) இருந்தது. மேற்படி பணத்தைப் பற்றி சரியான முகாந்திரம் சொல்லாததால் விசாரணைக்காக மேற்படி பணம் ரூ.49,500/- கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையில் இருந்த திரு.K.சிவசங்கரன் என்பவரது மனைவி திருமதி.நற்சோணை என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.C.S.சாந்தி என்பவர் சோதனை செய்ய அவரது ரோஸ் நிற ஹேண்ட் பேக்கில் 500/- ரூபாய் நோட்டுகள் இருந்தது மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது ரூ.10,000/- (500X20=10,000) இருந்தது. மேலும் மேற்படி ரோஸ் நிற ஹேண்ட் பேக்கில் சுமார் 3 பவுன் தங்க செயின்-1, சுமார் ½ பவுன் ஜிமிக்கியுடன் கூடிய கம்மல்-1 ஜோடி மற்றும் சுமார் 2 கிராம் வெள்ளை கல் வைத்த கம்மல்-1 ஜோடி ஆகியவை காணப்பட்டது. மேற்படி பணத்தை பற்றி திருமதி.நற்சோணையிடம் கேட்டபோது அது

அவரது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.10,000/- மற்றும் மேலே கண்ட தங்க நகைகள் அனைத்தும் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அறையில் அமர்ந்திருந்த திருமதி.மலர்விழி என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.C.S.சாந்தி என்பவர் சோதனை செய்ய அவரது வெள்ளை நிற ஹேண்ட் பேக்கில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது ரூ.1,540/- (500X2=1,000, 200X1=200, 100X3=300, 10X4=40) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அவரிடம் கேட்க அது அவரது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.1,540/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மெயின் ஹாலுக்கு மேற்கு பக்கம் உள்ள கூட்ட அரங்கத்தில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.நாகஜோதி, உதவி பொறியாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.C.S.சாந்தி என்பவர் சோதனை செய்ய அவரது பச்சை நிற ஹேண்ட் பேக்கில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது ரூ.290/- (200X1=200, 50X1=50, 20X2=40) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அவரிடம் கேட்க அது அவரது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.290/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரிடம் திருநெல்வேலி மாவட்டம், சீதபற்பநல்லூரில் உள்ள ஆதவன் மார்டன் ரைஸ் மில் சம்பந்தப்பட்ட கோப்பினை ஆஜர்படுத்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் அவரும் அதற்குரிய பிரிவில் இருந்து கோப்பு எண்.3250/அ4/2022-ஐ பெற்று ஆஜர் செய்தார். மேற்படி கோப்பு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.K.சிவசங்கரனிடம் தனிநபர் பண இருப்பு பதிவேடு பராமரிக்கப்படுகிறதா என்று கேட்டதற்கு அவரது அலுவலகத்தில் மேற்படி பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். மேற்படி பொது மேலாளரின் அலுவலகத்திற்கு வெளியே வராண்டாவில் நின்று கொண்டிருந்த TN 88 D 4639 என்ற மகேந்திரா KUV வாகனத்தை சோதனை செய்ய காரின் டேஷ் போர்டில் இருந்த மேற்படி வாகனத்தின் வாகன பதிவுச்சான்றின் நகல், திருநெல்வேலி மாநகரம், பெருமாள்புரம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி கிளையில் 23.09.2022-ம் தேதி திரு.K.சிவசங்கரன் என்பவரது வங்கி கணக்கு எண்.30955658631-ல் ரூ.1,00,000/- மற்றும் மேற்படி வங்கி கிளையில் 23.09.2022-ம் தேதி திருமதி.R.நற்சோணை என்பவரது வங்கி கணக்கு எண்.20409306210-ல் ரூ.3,00,000/- செலுத்தியதற்கான வங்கி செல்லான் (Counterfoil) மற்றும் திருமதி.R.நற்சோணை மற்றும் திரு.K.சிவசங்கரன் ஆகியோரது பெயரிலான SBI Namakkal Town Branch கணக்கு எண்கள்.20409306210 & 30955658631- என்று எழுதியுள்ள வெள்ளை துண்டு பேப்பர் காணப்பட்டது. இது குறித்து

திரு.K.சிவசங்கரன் அவர்களிடம் கேட்க தனது மற்றும் தனது மனைவியின் பெயரிலான வங்கி கணக்கில் மேற்படி பணத்தை தானே செலுத்தியதாகவும் அது குறித்து எழுதி வைத்துள்ளதாக தெரிவித்தார். மேற்படி வாகன பதிவு சான்றின் நகல், வங்கி செல்லான்கள் இரண்டு (Counterfoil) மற்றும் துண்டு வெள்ளை பேப்பர் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (14.10.2022) இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம்.V.V.கணேசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், திருநெல்வேலி. ஓம்.மற்றும் சிலர்.

Sir, Received the complaint on 15.10.2022 at 11.00hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.08/2022 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 on 15.10.2022 at 11.30 hrs Sd.E.Mcclarine Eskhol, ADSP, V&AC, Tirunelveli.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli, Statement of Tr.K.Sivasankaran and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

15/10/22
ADSP, V&AC
Tirunelveli